Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 28 2025

வெள்ளிக்கிழமை 28, பெப்ரவரி 2025 | ஒளி: 10 கதிர் 169 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

# முன்னாள் ஜனாதிபதிகள் பறந்த பயண செலவுகள்



முன்னாள் ஜனாதிபதிகளின் வெளிநாட்டு பயணங்களுக்காக செலவிடப்பட்ட நிதி தொடர்பான விவரங்கள் வியாழக்கிழமை (27) பிரதமரினால் சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில் மஹிந்த ராஜபக்‌ஷவினால் 4 வருடங்களில் அதாவது 2010-2014 வரையான காலப்பகுதியில் 3,572 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2015- 2019 வரையான காலப்பகுதியில் மைத்திரிபால சிறிசேனவினால் 384 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

20220-2022 கோட்டாபயவினால் 126 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2023-2024 வரையான ஒரு வருட காலப்பகுதியில் ரணில் விக்ரமசிங்கவினால் 533 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

அதாவது உத்தியோகபூர்வ விஜயங்கள், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல், வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிப்பு என மேல்பூச்சுக்கு சொல்லிக்கொண்டு, தமது அள்ளக்கைகளுடன் நூற்றுக்கணக்கான வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு மக்கள் பணத்தை வாரி இறைத்த விதமே இது.

அதில் 2013ஆம் ஆண்டு மாத்திரம் மஹிந்தவினால் 1,144 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

ஆனால், 2024 செப்டெம்பர் முதல் 2025 பெப்ரவரி வரையான இந்தக்காலப்பகுதிக்குள் தற்போதைய ஜனாதிபதி அனுரவினால் 1.8 மில்லியன் ரூபாய் செலவிப்பட்டிருக்கிறது.

இதில் (சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட மிக முக்கிய உத்தியோகபூர்வ விஜயங்கள் உள்ளடங்கும்) இந்த மூன்று முக்கிய பயணங்களின் போதும் முதலீடுகள், தொழிற்தளங்கள் உருவாக்குதல் உள்ளிட்ட பல முக்கிய திட்டங்கள் குறித்து பேசப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால், சர்வதேச சமூகம் இலங்கையை ஒதுக்கி வைக்கும் என்று கூறியவர்களுக்கு,

தமக்கு கிடைக்கும் உத்தியோகபூர்வ அழைப்பையேற்று வெளிநாடுகளுக்கு எவ்வாறு செல்ல வேண்டும்.

அரச நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அனுபம் இல்லாத அனுரவிடம் இருந்து இனியாவது பாடம் கற்றுக்கொள்ளுங்கள்.

எது எப்படியோ இந்த கொள்ளை கும்பலுக்கு கடிவாளம் இட்டு கடந்த தேர்தலில் மக்கள் தக்க பாடம் புகட்டிய இருக்கிறார்கள்.

## "ஒவ்வொருவரும் வருமான வரி செலுத்த வேண்டும்"




சேவை ஏற்றுமதிக்கு 15% வரி விதிக்கப்பட்டதால் சேவை ஏற்றுமதி வழங்குநர்களுக்கு எந்த அநீதியும் ஏற்படவில்லை என்று கூறிய தொழிலாளர் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சர் அனில் ஜெயந்தா, நாட்டின் வருமான வரிக் கொள்கையின் கீழ், ஒவ்வொரு நபரும் வருமான வரி செலுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில், சாதாரண வரி செலுத்துவோருடன் ஒப்பிடும்போது, டிஜிட்டல் சேவை ஏற்றுமதி வழங்குநர்களுக்கு சில வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



## "சாட்சியங்களை மறைக்க கொலைகள் நடக்கின்றன"

ஆயுதங்களை காரணம் காட்டி சந்தேக நபர்களை கொலை செய்யும் சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நடந்து வருவதோடு, குற்ற செயலுடன் தொடர்புடைய சாட்சியங்களை மறைக்க கொலைகள் நடக்கின்றன என்ற கருத்தும் மக்களிடையே நிலவுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

தொடர்ச்சி P2



## "அஞ்ச வேண்டாம்; முப்படையும் களத்தில்"

நாட்டில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பதை ஏற்க முடியாது என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதியுடன் எகிப்து தூதுவர் சந்திப்பு

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் எகிப்து தூதுவர் ஆதில் இப்ராஹிம் அஹமட் இப்ராஹிம் (*Adel Ibrahim Ahmed Ibrahim*) ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு வியாழக்கிழமை (27) அன்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## தாவ முயன்றார் ஜயவீர; தடுத்தார் பிரதமர்



சர்வஜன பலய கட்சி தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர சபைக்கு நடுவாக ஆளும் கட்சி பக்கம் செல்ல தயாரான சம்பவம் வியாழக்கிழமை (27) இடம்பெற்றது.

அதை அவதானித்த பிரதமர் ஹரிணி அமரசூரிய தவறியேனும் எமது பக்கம் வந்துவிட வேண்டாம் என்று கூறி அவரை தடுத்து நிறுத்தினார்.

தொடர்ச்சி P2

## முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் நாடு கடத்தப்படுவாரா?



நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ், இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர் என குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் லஷ்மன் அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்துவதற்கான வேண்டுகோளை இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் விடுத்திருந்தது.

தொடர்ச்சி P2

## "நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்"



நாட்டின் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பிலான கலந்துரையாடலொன்று ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் விமானப் படையின் உயர் அதிகாரிகளுக்கு இடையில் வியாழக்கிழமை (27) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன், வலுவான விமானப் படையாக இலங்கை விமானப்படையை வலுப்படுத்தல், இலங்கை இராணுவம் மற்றும் கடற்படையின் முன்னெடுப்புகளுக்காக விமானப்படையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி P2

## "சிறையில் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன்"

தனக்கு வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவை வழங்குவதற்கு சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை எனவும் நான் சிறைத் தண்டனை அனுபவித்து வந்த காலத்தில் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன் என்றும் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## பாராளுமன்றத்தில் ஹக்கீம், பிமல் மோதல்



அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் வியாழக்கிழமை (27) பாராளுமன்றத்தில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

தன்னை நிதிக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள விடாமல் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் குற்றம் சுமத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



## இலங்கையில் ஜப்பான் முதலீடு

இலங்கையில் துறைமுகம் சார்ந்த திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு முதலீடு செய்ய ஜப்பானிய அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் இசொமதா அகியோவிற்கும் (*Isomata Akio*) இடையில் வியாழக்கிழமை (27) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## "தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாத",



நீதர்ஷன் விநோத்

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு கோரி மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமொன்று வியாழக்கிழமை(27) யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2




## ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு

கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் குறித்து உளவுத்துறை தகவல் கிடைத்தும், அதனை தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பில், வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைவாக, அறவிடப்பட்ட நிதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு 245 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதாகச் சட்டமா அதிபர் வியாழக்கிழமை (27) உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## “சாட்சியங்களை மறைக்க கொலைகள் நடக்கின்றன”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (27) இவ்வாறு கேள்வி எழுப்பியதுடன் மேலும் பேசுகையில்,

வளமான நாடு அழகான வாழ்க்கை கொள்கை பிரகடனத்தில் "சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி - சம அணுகல் நீதிமன்ற முறைமை" என்ற அத்தியாயத்தின் கீழ் சட்டத்தின் பாதுகாப்பு நியாயமானதும் சமத்துவமானதும், வெளிப்படத்தன்மையும் வினைத்திறனும் சுயாதீனத் தன்மையும் மக்கள் நம்பிக்கையும்

எனும் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுவோம் என அரசாங்கம் பொதுமக்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கிறது.

தற்போதைய நிலையைப் பார்க்கும்போது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களின் நடவடிக்கைகள் தலைதூக்கி மற்றும் நீதிமன்றங்களில் நடக்கும் கொலைகளைப் பார்க்கும் போது, பொதுமக்களுக்கு தமது வாழ்க்கைப் பாதுகாப்பு குறித்த பிரச்சனை காணப்படுகிறது என்றார்.

## “அஞ்ச வேண்டாம்; முப்படையும் களத்தில்”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(27) எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

குற்றச் செயற்பாடுகளை குறைப்பதற்காக தற்போது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் பாதுகாப்புக்காக முப்படையினரும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். அத்துடன் பொலிஸ் நடமாடும் சேவைகளும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. சிவில் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றார்

2024ஆம் ஆண்டு முதல் இரண்டு மாதங்களில் 12 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருந்தன என்றார்.

## அர்ஜுன மகேந்திரன் நாடு கடத்தப்படுவாரா?

எனினும், சிங்கப்பூரின் சட்டங்களின் கீழ் இலங்கைக்கு அவரை நாடு கடத்த முடியாது என சிங்கப்பூரின் சட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலஞ்ச ஊழல் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கினை தொடர்ந்து 2025 பெப்ரவரி 25ஆம் திகதி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் நீதிமன்றில் ஆஜராகவேண்டும் என கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி வழக்கு தொடர்பில், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனைக் கைது செய்யுமாறு, கொழும்பு நிரந்தர ட்ரயல்-அட்-பார் பெஞ்ச் ஏற்கெனவே, இன்டர்போல் மூலம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது அனுரகுமார திசநாயக்க, அர்ஜுன மகேந்திரனை நாட்டிற்கு கொண்டுவருவேன் என்றும் இது தனது முன்னுரிமை எனவும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இலங்கையில் ஜப்பான் முதலீடு

ஜப்பானிய அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்த பாதுகாப்பு ஒத்துழைப்பு உதவித் திட்டத்தில் இலங்கையையும் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக இசொமதா அகியோ தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்தில் தேசிய நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக ஜப்பான், சுவிட்ஸர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா இணைந்து மேற்கொள்ளும் திட்டம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டதோடு அதன் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜப்பான் தூதுவர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

டிஜிட்டல் பொருளாதாரம் மற்றும் விமான நிலைய முதலீடுகளின் தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது.

விரைவில் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு ஜப்பானிய தூதுவர் இசொமதா அகியோ (Isomata Akio), ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, பொருளாதார மற்றும் நிதி விவகாரங்களுக்கான ஜனாதிபதி ஆலோசகர் கலாநிதி துமிந்த ஹுலங்கமுவ, ஜப்பான் தூதரகத்தின் முதல் செயலாளர் மற்றும் பொருளாதார மேம்பாட்டு ஒத்துழைப்புப் பிரிவின் பிரதானி ஓஹாஷி கென்ஜி (Ohashi Kenji), ஜப்பான் தூதரகத்தின் முதல் செயலாளர் மற்றும் அரசியல் பிரிவு பிரதானி முரதா ஷினிசி (Murata Shinichi) ஆகியோர் இந்த சந்திப்பில் இணைந்து கொண்டுள்ளனர்.

## “நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்”



இம்முறை வரவு-செலவு திட்டத்தில் இலங்கை விமானப்படைக்கான ஒதுக்கீடுகளின் அளவு மற்றும் விமானப்படையில் தற்போது காணப்படும் தேவைகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, விமானப்படை தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க உள்ளிட்ட விமானப்படையின் உயர் அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

## “சிறையில் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன்”



பொதுபல சேனா அலுவலகத்தில் வியாழக்கிழமை (27) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சிறைத் தண்டனை அனுபவித்து வந்த காலத்தில் நான் மிகவும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டேன். எனது உடல் நிலையைக் கருத்திற் கொண்டு தினமும் வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவை வைத்தியர்கள் பரிந்துரைத்தனர். ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் வெளியிலிருந்து உணவைப் பெற்றுக் கொள்ள எனக்கு அனுமதியளிக்கவில்லை.

இதற்கு முன்னர் 4 சந்தர்ப்பங்களில் சிறை தண்டனை அனுபவித்த போது நான் இவ்வாறு நடத்தப்படவில்லை. உண்மையில் இது அரசாங்கத்தின் முடிவா அல்லது சிறை அதிகாரிகளின் தன்னிச்சையான செயலா? என்னைப் போன்று சிறைச்சாலை வைத்தியசாலையில் உள்ள கைதிகள் பலரும் மனிதாபிமானமற்ற முறையிலேயே நடத்தப்பட்டுகின்றனர்.

இன்று சமூக வலைத்தளங்களை அதிகமாக உபயோகப்படுத்துவோர் செல்வாக்கு மிக்கவர்களாகவுள்ளனர். அவ்வாறானவர்களது அழுத்தங்கள் காரணமாகவே எனக்கான மருத்துவ தேவைகள் கூட புறக்கணிக்கப்பட்டன. கைதிகள் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். மருத்துவ தேவைகள் காணப்படும் கைதிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்றார்.

## “தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாத”,



யாழ்ப்பாணம் தீவக மீனவ அமைப்புகள் இணைந்து, யாழ்ப்பாணம் - பண்ணை சுற்று வட்டத்தில் ஆரம்பமாகிய குறித்த போராட்டமானது தொடர்ந்து அருகாமையில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் உதவி ஆணையாளரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்து தொடர்ச்சியாக யாழ். ஆஸ்பத்திரி வீதியூடாக இராசாவின் தோட்ட வீதியினை அடைந்து தொடர்ந்து யாழ். இந்தியத் துணை உயர் ஸ்தானிகராலயத்தை அடைந்தது.

இதன் பொழுது, “நிறுத்து நிறுத்து இழுவை மடி தொழிலை நிறுத்து”, “தாண்டாதே தாண்டாதே எல்லை தாண்டாத”, “வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்”, “அள்ளாதே அள்ளாதே எமது வளத்தை அள்ளாதே”, “வாழ விடு வாழ விடு எங்களை வாழ விடு”, “எல்லை தாண்டி வந்து என் இனத்தைப் பட்டினி ஆக்காதே” ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனை தொடர்ந்து, இந்திய யர்ஸ்தானிகாரலயத்தில் மகஜரை வழங்க யாழ். பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி போராட்டக்காரர்களுக்கு அனுமதி வழங்கினர். இதனைத் தொடர்ந்து போராட்டக்காரர்களில் சிலர் இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளைச் சந்தித்து மகஜரை கையளித்தனர்.

இதேவேளை, போராட்டக்காரர்கள் வருகை தந்த பாதைக்குப் போக்குவரத்து பொலிஸார் கடுமையான பாதுகாப்பு வழங்கியதோடு பொதுமக்களைக் குறித்த பாதையில் பயணிக்க அனுமதி மறுக்கப்பட்டது. மேலும் பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகள் சகிதம் இந்திய யர்ஸ்தானிகாரலயத்துக்கு முன்பாக கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## “ஒவ்வொருவரும் வருமான வரி செலுத்த வேண்டும்”

அங்கு சாதாரண மக்கள் அதிகபட்சமாக 36 சதவீத வருமான வரிக்கு உட்பட்டவர்கள், அதே நேரத்தில், டிஜிட்டல் சேவை ஏற்றுமதி வழங்குநர்கள் 15 சதவீத வரி வரம்புக்கு உட்பட்டு வரி விதிக்கப்படுவார்கள்.

டிஜிட்டல் சேவை வழங்குநர்கள் முதல் ரூ.500க்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்

. 150,000 மற்றும் அடுத்த ரூ.க்கு 6 சதவீதம் மட்டுமே வசூலிக்கப்படும். 85,000 வரை வருமானம் இருந்தால், வேறு எந்த வருமானமும் அதிகபட்சமாக 15 சதவீத வரிக்கு உட்பட்டதாக இருக்கும்.

டிஜிட்டல் சேவை ஏற்றுமதி வழங்குநர்கள் வெளிநாட்டிலிருந்து 15 சதவீத வரி விதிக்கப்பட்டால் எந்த வரியும் விதிக்கப்படாது.

அவர்களுக்கு 15 சதவீதத்திற்கும் குறைவாக வரி விதிக்கப்பட்டிருந்தால், மீதமுள்ள 15 சதவீதத்திற்கு மட்டுமே இரட்டை வரி நிவாரணக் கொள்கையின் கீழ் கட்டணம் வசூலிக்கப்படும்.

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (OECD) வரி கட்டமைப்பின்படி, வருமானம் ஈட்டும் நாடு குறைந்தபட்ச உலகளாவிய வரியை விதிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசாங்கம் கூடுதல் வரிகளை அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படும் கூற்றுகளை நிராகரித்துள்ள அமைச்சர் அனில்ஜெயந்தா, அவை தவறாக வழிநடத்துவதாகவும் சர்வதேச இரட்டை வரிவிதிப்பு ஒப்பந்தங்களின் கீழ் சேவை வழங்குநர்கள் நிவாரணம் பெறுவார்கள் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதியுடன் எகிப்து தூதுவர் சந்திப்பு

இலங்கை மற்றும் எகிப்துக்கு இடையில் நீண்ட காலமாக காணப்படும் நட்புறவை பலப்படுத்துவது தொடர்பிலும் இருநாட்டு சுற்றுலா மற்றும் முதலீட்டு துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மத்திய கிழக்கு வலயத்தின் தற்போதைய நிலைமை குறித்தும் இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே, எகிப்து அரபு குடியரசு தூதரகத்தின் ஆலோசகர் மொஹமட் மாதி ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.

## தாவ முயன்றார் ஜயவீர; தடுத்தார் பிரதமர்



வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவின் க்கு பிரதமர் பதிலளித்துக் கொண்டிருந்தார்

எதிர்க்கட்சி உறுப்பினரான திலித் ஜயவீர, எதிர்க்கட்சியில் சில பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஏதோ கதைத்துவிட்டு ஆளும் கட்சி பக்கத்தில் அமைச்சர் ஒருவரை சந்திப்பதற்காகச் சபைக்கு நடுவாகச் செல்ல முயன்றார். அதன் போதே பிரதமர் ஹரிணி இவ்வாறு கூறினார்.

இவ்வேளையில் தன்னை சுதாகரித்துக்கொண்ட திலித் ஜயவீர உடனே தனது ஆசனத்திற்குத் திரும்பி விட்டார்.

## பாராளுமன்றத்தில் ஹக்கீம், பிமல் மோதல்



ஜனாதிபதி தன்னை நிதிக்குழுவில் இணைத்துக் கொள்ளவதாக உறுதியளித்திருந்தார் என சுட்டிக்காட்டிய ரவூப் ஹக்கீம்,

ஜனாதிபதி உறுதியளித்தும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு தனக்கு அனுமதி வழங்கவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் கூற்றுக்கு மறுப்பு தெரிவித்த அமைச்சர், பிமல் ரத்நாயக்க அவரின் குற்றச்சாட்டையும் என்சார்ட் அறிக்கையிலிருந்து நீக்குமாறு தெரிவித்துள்ளார்.

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு

இதேவேளை, இழப்பீடு வழங்கப்பட்டதைக் கண்காணிக்க 12 தொடர்புடைய மனுக்கள் வியாழக்கிழமை (27) தலைமை நீதியரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர்களான எஸ்.துரைராஜா மற்றும் ஏ.எச்.எம்.டி.நவாஸ் ஆகியோர் அடங்கிய நீதிமன்ற ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சட்டமா அதிபரினால் மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்...

வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிட்டது போல, தமக்கு சலுகை வழங்கப்படவில்லை என தெரிவித்து வியாழக்கிழமை (27) மதியம் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தாதியர்களும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(தமிழ் மிரர் நிருபர்கள்)





பதுளை



யாழ்ப்பாணம்









நாவலப்பிட்டி



நுவரெலியா







வவுனியா





சம்மாந்துறை

# "கடற்றொழிலுக்கு தொழில்நுட்ப உதவிகள் தேவை"

கடற்றொழில் நீரியல் மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை பிரதி.நிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று வியாழக்கிழமை (27) அன்று நடைபெற்றது.

ஐகொழும்பு மாளிகாவத்தையிலுள்ள அமைச்சில் நடைபெற்ற சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மார்க் அன்ட்ரி பிரான்சே, ஐ.நாவின் உணவு மற்றும் விவசாய திட்டத்தின் உதவி பிரதிநிதி நளின் முனசிங்க, உணவு மற்றும் விவசாய அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கடற்றொழில்சார் நிபுணர் பாலித கித்சிறி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



இலங்கையின் கடற்றொழில் துறைக்கும், கடல் வளங்களைப் பாதுகாப்பதற்கும் ஐ.நா. மற்றும் அதன் துணை அமைப்புகளால் வழங்கப்பட்டு வரும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், இதனை மேலும் வலுப்படுத்துவதற்குத் தேவைப்பாடும் தொழில்நுட்பம் உள்ளிட்ட உதவிகள் தொடர்பிலும் கோரிக்கை முன்வைத்தார்.

இலங்கையில் கடற்றொழிலாளர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கிலுள்ள மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும், அவற்றைத் தீர்ப்பதற்கு தமது அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் பற்றியும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கடற்றொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டு நிதியில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்த அமைச்சர், ஐ.நாவின் ஒத்துழைப்புகள் வழங்கக்கூடியதாக இருந்தால் அதனைச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதேபோல, அண்மையில் தாம் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பில் அமைச்சரிடம் குறிப்பிட்ட ஐ.நா. பிரதிநிதிகள், இதன்போது கடற்றொழிலாளர்கள் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கியுள்ள ஆணை மற்றும் சமகால அரசியல் நிலைவரங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



## புதிய அரசியலமைப்பு எப்போது?

மக்களின் பணத்தைச் சேமிப்பதாகக் கூறி வந்த அரசாங்கத்திலுள்ள எம்.பிக்கள் தமது சம்பளத்தை எதற்காகக் கட்சிக்கு வழங்க வேண்டும். செலவுகளைக் குறைக்கவே வந்தவர்கள் என்றால், தமது சம்பளத்தைக் கட்சிக்குக் கொடுக்காது பாடசாலைகளுக்கும் விகாரைகளுக்கும் வழங்கலாம் என்று இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(27) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது, சாணக்கியன் இராசமாணிக்கம் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் புதிய அரசியலமைப்பு தொடர்பான வாக்குறுதிகளைத் தேர்தல் காலத்தில் வழங்கியிருந்தது. ஆனால், அந்த நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் எதனையும் கூறவில்லை. இந்நிலையில் இப்போதைக்குப் பொருளாதார நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் கூறியுள்ளார். நாட்டில் பெரும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாது செய்யப்படும் என்றும் கூறியுள்ளனர். அப்படியாயின் எப்போது புதிய அரசியலமைப்பை கொண்டுவரப் போகின்றீர்கள் என்று கேட்கின்றோம் என்றார்.

## 'ஊழலுக்கு எதிராக மக்களை வலுப்படுத்துதல்'

ஜனாதிபதி அலுவலகம், இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுடன் இணைந்து ஏற்பாடு செய்த உள்நாட்டு அலுவல்கள் பிரிவு (IAU) மற்றும் ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் (AIA) மதிப்பீடு குறித்த செயலமர்வு வியாழக்கிழமை (27) அன்று கொழும்பு மெண்டரினா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நாட்டின் அரசியல் முறைமை மற்றும் அரச சேவை மாற்றம் அடைய வேண்டும் என்று மக்கள் முடிவு செய்துள்ளதாகவும், அதற்கேற்ப அரசியல் முறைமையை மாற்ற, மாற்றுச் சக்தியொன்றைத் தேர்ந்தெடுத்ததாகவும் 'ஊழலுக்கு எதிராக மக்களை வலுப்படுத்துதல்' என்ற தலைப்பில் நடைபெற்ற செயலமர்வில் சிறப்புரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.

மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவது மக்கள் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்பதால், அந்த நோக்கத்திற்காக நடைமுறைச் செயல்பாட்டில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை இந்த செயலமர்வு




வலியுறுத்துகிறது என்றும் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

அதன்படி, நேர்மைத்திறனான அரச சேவைக்காக அணிதிரள வேண்டும் என்று ஜனாதிபதியின் செயலாளர் அனைத்து அரச அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்தார்.

இந்தப் செயலமர்வில் பொதுமக்களுடன் நேரடியாக பணியாற்றும் நிறுவனங்கள் என்ற அடிப்படையில் 25 மாவட்ட செயலகங்கள், 09 மாகாண செயலகங்கள், 24 அமைச்சுகள் மற்றும் 43 திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதிகாரிகள் பங்கேற்றனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆர். எஸ். ஏ.திசாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்ரமசிங்க, மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட, மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரிகளும் இந்த செயலமர்வில் கலந்து கொண்டனர்.

## ஈழத்துத் தமிழ் நூல் வெளியீடுகளை ஊக்குவித்தல்

கொழும்புத் தமிழ்ச் சங்கமானது, ஈழத்துத் தமிழ் வெளியீட்டினை ஊக்குவிக்கும் முகமாக, வெளியிடப்படும் நூலின் பிரதிகள் 02 (இரண்டினை) சம்மந்தப்பட்டோரிடம் இருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. தங்களால் அனுப்பிவைக்கப்படும் வெளியீடுகள், சங்க நூலகத்தில் பேணப்படும் என்பதையும், வருட இறுதியில் நடாத்தப்படும் நூல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகிறது. இதற்கமைவாக எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் தமிழில் ஈழத்தே வெளியிடப்படும் நூல் பிரதிகள் இரண்டினை எமது முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமிடத்து அத்தகைய நூல்கள் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும்.

அல்லது நூலின் பெறுமதி வங்கிக் கணக்குக்கு பண மாற்று செய்யப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
இணைப்பாளர்,
நூல் ஊக்குவிப்புத் திட்டம்-2025
கொழும்புத் தமிழ்ச் சங்கம்,
இல. 07. சங்கம் ஒழுங்கை,
கொழும்பு-06.

## "நாட்டில் குற்றங்கள் அதிகரிக்கவில்லை"

நாட்டில் சமீப காலங்களில் குற்றங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால வியாழக்கிழமை (27) அன்று பாராளுமன்ற கூட்டத்தின்போது தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 14 குற்றச் சம்பவங்களும், 2016 மற்றும் 2018 முதல் இரண்டு மாதங்களில் தலா 12 சம்பவங்களும், 2024இன் முதல் இரண்டு மாதங்களில் 14 சம்பவங்களும் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த கால குற்றங்கள் குறித்த தரவுகளின்படி, இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் இதேபோன்ற நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

## "விலகிப் போக முடியாது"

மக்களின் எதிர்பார்ப்புகளை அதிகரித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருந்து விலகிப் போக முடியாது என சர்வஜன பழைய கட்சித் தலைவர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(27) நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் ஜனாதிபதி செலவினத் தலைப்பு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே திலித் ஜயவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரவு-செலவுத் திட்டம் எந்த திசையை நோக்கி இந்த நாட்டை கொண்டு போகிறது என்று புரியவில்லை. எவ்வாறு இந்த வரவு- செலவுத் திட்டம் முன்னிலையானது என்றும் புரியவில்லை. இந்த அரசாங்கம் சோசலிச அரசாங்கம் என்று கிராமங்களில் உள்ளவர்கள் நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். கிராமங்களில் உள்ளவர்களை எவ்வாறு மேலே கொண்டு வரப்



போகின்றோம் என்றோ அதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பிலோ குறிப்பிடப்படவில்லை. அவர்கள் முன்னேற்றமடைய வேண்டும். இளைஞர்களின் கனவுகளை நனவாக்க வேண்டும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அந்த கனவுகளுக்கு உயிர் கிடைக்குமா? உள்ள கனவுகளையும் கலைக்கும் வகையிலேயே வரவு- செலவுத் திட்டம் அமைந்துள்ளது என்றார்.

## அலர்ட் ஆகினார் "ஹரக் கட்டா"

போதைப்பொருள் கடத்தல்காரரான "ஹரக் கட்டா" என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்கிரமரத்ன உள்ளிட்ட மூவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை 'ஸ்கைப்' காணொளி அழைப்பு ஊடாக மேற்கொள்ளுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மனுதாரர்களின் நிலைப்பாட்டை எதிர்வரும் மார்ச் மாதம் 17ஆம் திகதி அறிவிக்குமாறு வியாழக்கிழமை (27) கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் சுஜீவ நிஷங்க முன்னிலையில் அழைக்கப்பட்டபோது, 'ஹரக் கட்டா' நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, 'ஹரக் கட்டா' தனது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு நீதிமன்றில் ஆஜராகவில்லை. அவருக்கு எதிரான வழக்கு மீதான விசாரணையை 'ஸ்கைப்' காணொளி அழைப்பு ஊடாக மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.



அதன்படி நீதவான், 'ஹரக் கட்டா'வுக்கு எதிரான வழக்கு மீதான விசாரணையை 'ஸ்கைப்' காணொளி ஊடாக மேற்கொள்ளுமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கை தொடர்பில் மனுதாரர்களின் நிலைப்பாட்டை எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி அறிவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# யானைகளை காப்பாற்ற வேண்டியது சகலரதும் பொறுப்பாகும்

மனித-யானை மோதலின் விளைவாக, யானைகளால் அழிக்கப்படும் பயிர்ச்செய்கைகள் மனிதர்களின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதிக்கின்றன. யானைகள் பயிர்களை மட்டுமல்லாது, அருகிலுள்ள சொத்துகளையும் அழிக்கின்றன. சில சமயங்களில் மனிதருக்குக் காயங்களை அல்லது மரணத்தை ஏற்படுத்தி, மனிதப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன

மனித-யானை மோதல்களில் 2023ஆம் ஆண்டில் 340 யானைகள் உயிரிழந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு 239 யானைகள் உயிரிழந்துள்ளன. அத்துடன், யானை தாக்குதலால் ஏற்பட்ட மனித உயிரிழப்புகளும் 117ல் இருந்து 90 ஆக குறைந்துள்ளதாகத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. எனினும், 2025 ஆம் ஆண்டு இதுவரையிலான காலப்பகுதியில், ரயில்களில் மோதுண்டு இறக்கும் யானைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கையில் தற்போது 5,300 யானைகளுக்கு மேல் இல்லை. ஆண்டுதோறும் குறைந்தது 400 யானைகள் பல்வேறு விபத்துகளால் இறக்கின்றன. கிராமங்களுக்குள் நுழையும் சில யானைகளை மக்கள் சுட்டுக்கொன்று விடுகின்றனர். அல்லது 'ஹக்கப்பட்டாஸ்' வெடிகளைச் சாப்பிட்ட பிறகு காயங்களால் இறக்கின்றன. அதன்பின்னர் யானையின் இரண்டு தந்தங்களையும் வெட்டி, வாலில் இருந்து அனைத்து முடிகளையும் பிடுங்கிவிட்டு ஓடிவிடுகிறார்கள்.

யானைப் பிரச்சினையைத் தீர்க்க எந்த அரசாங்கமும் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. ஒவ்வொரு அரசாங்கமும் செய்தது மின்சார வேலிகளை நிறுவுவதற்குப் பணத்தை அனுப்பி அதிலிருந்து தரகு பணத்தை வசூலிப்பதுதான். மலிவான மின்சார வேலிகள் பயனற்றவை. அப்படிப்பட்ட வேலியை யானை உதைத்து எறிந்தால், வேலி அறுந்து விழுந்துவிடும்.

யானைப் பிரச்சினையைத் தீர்ப்பதை விட யானைகளை ஒழிப்பது எளிது. யானைகள் அதிகமாக இருக்கும் பகுதிகளில் உள்ள விவசாயிகளும் யானைகள் இறக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். இது தொடர்ந்தால், சில வருடங்களுக்குள், இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை முற்றிலுமாக அழிக்கப்பட்டு,

யானைகள் ரயிலில் அடிபடுவது கடந்த சில தசாப்தங்களாக ஒரு தொடர்ச்சியான நிகழ்வாகும். ரயில் வரும் வேகத்தில், ரயில் தண்டவாளத்தில் இருக்கும் யானைக்குத் திரும்பக்கூட நேரம் இருக்காது. மேலும், சில யானைகள் ரயில் வருவதைப் பார்த்த பிறகும் ரயில் தண்டவாளத்தின் நடுவில் நிற்கின்றன. ரயில்வே சாரதிகள், ரயில் பயணிகளா? அல்லது யானைகளா? என்பதை விட்டுக் குழப்பமடைந்துவிடுகின்றனர்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு, இந்த நாட்டின் நிலப்பரப்பில் 85 சதவீதம் காடுகளாக இருந்தபோது, காடுகளில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட யானைகள் இருந்தன. அந்த எண்ணிக்கை குறைந்துவிட்டது. உயிருடன் இருக்கும் யானைகளைக் காப்பாற்றுவதற்கு போதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அரசாங்கமும் அதிரடியான உருப்படியான தீர்வை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

காடுகளில் யானைகளுக்குத் தேவையான அளவுக்கு உணவு இல்லை, காடழிப்பு ஒருபக்கம் இடம்பெறுவதால், மக்களின் வாழ்விடங்களை நோக்கி, யானைகள் வருகின்றன. சுற்றுலா செல்வோரும் யானைகளுக்கு உணவு கொடுத்து, நடு வீதிகளுக்கு இழுத்து வந்துவிடுகின்றனர். இதனால், உணவுகள் கிடைக்காதபோது, மனிதர்களை யானைகள் தாக்குகின்றனர். ஆகையால், யானைகள் பிரச்சினைக்கு உரியத் தீர்வை கொடுக்க வேண்டும்.



தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நடப்பவை எல்லாம் நல்லதுக்கே என எண்ணுங்கள். இதனால் வரப்போகும் நன்மைகளைப் பின்னர் உணர்வீர்கள்.

சில விடயங்கள் இதயத்தைப் புண்படுத்தும். இதனால், தொடர்ந்தும் அதைப்பற்றி யோசிக்காமல் விட்டால், துன்பங்கள் கழரைந்துவிடும்.

தவறுகளைச் செய்தவர்கள், அனுபவ ரீதியில்தான், தாம் செய்தது தவறு என உணருகிறார்கள். சில சமயங்களில் தேவையற்றும் மனம் குமைவதுண்டு. சின்ன விடயங்களை , இழப்புகளை நினைத்துக் கவலைப்பட்டவர்களுக்கு, இயற்கையாகவே நல்ல காரியங்கள் வந்து சேர்வதுண்டு. இயற்கையின் மாற்றம் எப்படி நிகழ்கின்றது என்பது எமக்குப் புரிவதேயில்லை.

உலகம் தொடர்ந்தும் அல்லல்படுவதேயில்லை. பல நாடுகள் தங்களுக்கான சுதந்திரத்தை கஷ்டப்பட்டே அடைந்தன.

எல்லாமே முடிந்துவிட்டன என விரக்தியடைய முடியாது. தப்பான ஆட்சிகள்தான் கரைந்துபோகும். உணர்க! நீதியுள்ளவனே பலசாலி. பொய்யர்களின் எண்ணங்கள், கானல் நீர் போலானது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

பொருளாதாரநெருக்கடியின் பின்னரான இலங்கை- 09

# சுதந்திர இலங்கையின் வர்க்கக் குணாம்சங்கள்



தெ.ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

இலங்கைகுச் சுதந்திரம் கிடைத்தாலும், சமூகக் கட்டமைப்பில், இனம் மற்றும் சாதியின் பழைய வேறுபாடுகள் தொடர்ந்து அடிப்படையாக இருந்தன. ஆனால், கொலனித்துவ காலத்தில் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார செயல்முறைகளின் விளைவாகத் தோன்றிய புதிய வர்க்கப் பிளவுகள் சமூகத்தை மறுசீரமைப்பதிலும் தேசிய விவகாரங்களின் இயக்கத்தை நிர்ணயிப்பதிலும் நேரடியாகச் செயல்பட்டன. மேற்கத்திய சிந்தனையின் விளைவிலான, முதலாளி வர்க்கம், நடுத்தர வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்ற மூன்று படித்தான வர்க்க அமைப்பு இலங்கைக்கு நேரடியாகப் பொருந்தாது, ஏனெனில், ஒருநடுத்தரவர்க்கமும் தொழிலாளி வர்க்கமும் (தொழில்துறை பாட்டாளி வர்க்கம் அல்ல) இருந்த போதும், சர்வதேச அளவில் தனது நலன்களைப் பாதுகாக்கும் வழிவகைகளுடன் தேசிய (அதாவது, சுதந்திரமான) முதலாளித்துவம் நடைமுறையில் இல்லை. இலங்கையின் மத்தியதர வர்க்கம், கருவுற்ற முதலாளித்துவ வர்க்கமாக இருந்த உயர், நடுத்தர வர்க்கமாகவும், கீழ் நடுத்தரவர்க்கமாகவும் கடுமையாகப் பிளவுபட்டது.

உயர் நடுத்தர வர்க்கம், எண்ணிக்கையில் மிகச் சிறியதாக, முக்கியமாக தொடர்புடைய குடும்பங்களைக் கொண்டது. இது புதிய சமூகக் கட்டமைப்பின் உச்சத்தில் நின்றது. அது கொலனித்துவத்தில் இருந்து பயனடைந்து இப்போது ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகளாக இருக்கும் குழுக்களைக் கொண்டிருந்தது. இது இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தது, ஒன்று தோட்டங்களில் இருந்தும் மற்றொன்று கொலனித்து வநிர்வாக அமைப்பிலிருந்தும் எழுந்தது.

தோட்டங்களை அமைத்தமையானது பல புதிய வழிகளைத் திறந்தது, மேலும் சில சிங்களவர்கள் தோட்டங்களுக்கு வேலை செய்யச் சென்றனர். காடுகளை வெட்டுதல், கட்டிடம் மற்றும் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்கள், சில்லறை வணிகர்கள், உணவு வழங்குபவர்கள் போன்றவற்றில் இவர்கள் ஈடுபட்டனர். தொடக்க நாட்களில் இந்த நடவடிக்கைகள் மிகவும் இலாபகரமானவை, மேலும் இந்த நபர்கள் பின்னர் கணிசமான நிலங்களைக் குவித்துச் செல்வந்தர்களாயினர். காலப்போக்கில் அவர்கள் தோட்ட மற்றும் சுரங்க உரிமையாளர்களாக வெளிப்பட்டனர். இருப்பினும், அவர்கள் உண்மையான தொழில்முனைவோர் குழுவாக மாறத் தவறி விட்டனர். உற்பத்தியில் நேரடியாகப் பங்கேற்பதற்குப் பதிலாக, அவர்களில் பலர் தோட்டக்காரராக இல்லாத 'ராஜாக்கள்' ஆனார்கள். அவர்களின் முயற்சிகள் திறமையற்ற முறைகள் மற்றும் வீழ்ச்சியால் குறிக்கப்பட்டன. நிலத்தின் மீதான நிலப்பிரபுத்துவ நாட்டம் காரணமாகவும், தோட்டங்களின் உரிமையானது அவர்களுக்குத் தேவையான அந்தஸ்தையும் கௌரவத்தையும் பிரிட்டிஷ் தோட்டக்காரர் இராஜ்ஜியத்துடன் கிட்டத்தட்டச் சமத்துவத்தின் அடிப்படையில் தொடர்புப்படுத்துவதன் காரணமாகவும் அவர்கள் தோட்டங்களை வாங்கினார்கள். 1900களில், இந்த அடுக்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியடைந்தது.

மேல் நடுத்தர வர்க்கத்தின் மற்ற பிரிவினர் கொலனி நிர்வாகத்தின் சேவையில், ஆரம்பத்தில் இடைத்தரகர்களாகவும், கொலனியின் அரசாங்கத்தில் 'விசுவாசமான பூர்வீக மக்களுக்கு' ஒதுக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்றுவதில் பங்களித்து மேநிலையாக்கம் அடைந்தனர். படிப்படியாக அந்த 'ஆங்கிலத்தின் மாயாஜால அறிவைப்' பெறுவதன் மூலம் அவர்கள் அதிக பங்குகளுக்குத் தகுதி பெற்றனர் மற்றும் உள்ளூர் மக்களின் மீது அதிகாரம் மற்றும் சலுகைகளைப் பெற்றனர். பிந்தைய கட்டத்தில், இந்த இரண்டு பிரிவுகளிலிருந்தும் சில தனிநபர்கள் கட்டத் தொழில், ஏற்றுமதி வணிகம், கப்பல் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றிற்குச் சென்றனர்.

இந்த பல்வேறு கூறுகள் ஒரு ஒருங்கிணைந்த மற்றும் ஒரே மாதிரியான உயர் நடுத்தர வர்க்கத்தை உருவாக்கியது. ஆளும் பிரிட்டிஷ் கொலனியாதிக்கத்திற்கு மட்டுமே கீழ்ப்பட்ட ஒரு மேலாதிக்க உயரடுக்கு நிலைபெற ஆரம்பித்தது. அவர்கள் நாட்டின் சாதாரண மக்களுடன் பொதுவான எதையும் கொண்டிருக்கவில்லை, அவர்கள் ஒரு வர்க்கமாகப் பிரிந்தனர். உண்மையில், சாதாரண இலங்கை மக்களுக்கு அவர்கள் அந்நியர்கள். உணர்வு, சித்தாந்தங்கள், ஆர்வங்கள், உடை, நுகர்வு முறைகள் மற்றும் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றின் அடிப்படையில், அவர்கள் எல்லா வகையிலும் ஆங்கிலேயர்களாக இருந்தனர், அவர்கள் அவ்வாறு இருக்க விரும்பினர். அவர்கள் ஆங்கிலத்தில் கல்வி கற்று, ஆரம்பகால கிறிஸ்தவர்களாக மாறி, ஓரளவு தொழில் முனைவோர் மனப்பான்மையை வளர்த்து, மேற்கத்திய எஜமானர்களின் திறமைகளைப் பெற்றனர், பாரம்பரிய மதிப்புகள் மற்றும் பழக்கவழக்கங்களை நிராகரித்து, 1931 இல் உள் 'சுய-அரசு' நிறுவப்பட்டதன் மூலம் ஆளும் வர்க்கத்தின் உள்ளூர் அங்கமாக ஆனார்கள். அவர்களின் பொருளாதார நலன்களைக் கட்டியெழுப்பவும், வர்க்க ஒற்றுமையை நிலைநாட்டவும், அவர்கள் 1908 இல் நிறுவப்பட்ட கீழ் நாட்டு உற்பத்தியாளர்கள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இவர்களில் சிலர், ஆங்கிலேயர்களின் பதவிகளையும் சலுகைகளையும் தாங்களாகவே எடுத்துக் கொண்டு புதிய ஆட்சியாளர்களாக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் உந்தப்பட்டார்கள். ஆனால் இன்றைய இலங்கையின் வரலாறு இவர்களது நடவடிக்கையைக் காலனித்துவத்தின் குறிப்பிடத்தக்க விமர்சனத்தின் காரணமாகவும், மக்களுக்குச் சேவை செய்வதில் உள்ள ஈடுபாட்டின் காரணமாகவும் அவர்கள் உந்தப்பட்டதாகப் பொய்யான வியாக்கியானங்கள் வழங்கப்படுகின்றன. டொனமோர் அரசியலமைப்பு வயது வந்தோருக்கான உரிமையை வழங்கிய போதும், 'ஆங்கில மொழியைப் பேசவும், படிக்கவும் மற்றும் எழுதவும் தெரியாத' எவரையும் சட்டவாக்க சபைக்குத் தேர்ந்தெடுப்பதைத் தடை செய்தபோது இந்த வர்க்கம் தனது அரசியல் உயர்வை உறுதி செய்தது. இது இந்த வர்க்கத்தின் முக்கியஸ்தர்களை மந்திரிகளாக ஆவதற்கும் 1931 முதல் 1947 வரை உள்ளக 'சுய-அரசு' இயந்திரத்தை இயக்குவதற்கும் உதவியது.

1940களின் பிற்பகுதியில் 200,000 என்று மதிப்பிடப்பட்ட கீழ் நடுத்தர வர்க்கம், பொது, வணிக மற்றும் வங்கி சேவைகளில் சம்பளம் பெறும் ஊழியர்களின் நடுத்தர அடுக்குகளை உள்ளடக்கியது, அத்துடன் ஆசிரியர்கள், தொழில் வல்லுநர்கள், சிறு நில உரிமையாளர் விவசாயிகள், வணிகர்கள், கடைக்காரர்கள் மற்றும் பலர் இதற்குள் அடங்குகின்றனர். அவர்களில் நியாயமான எண்ணிக்கையிலானோர், தங்கள்நிலத்தை வாழ்வாதாரத்திற்காகப் பயிரிட்டனர் அல்லது குத்தகைக்கு எடுத்து பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். பொது மற்றும் வணிகப் பணிகளில் இருப்பவர்கள், இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து மிகவும் போர்க் குணமிக்க தொழிற்சங்கங்களில் தங்களைத் தாங்களே ஒழுங்கமைத்துக்கொண்டு, அவ்வப்போது வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, தங்களுக்கு சிறந்த சம்பளம் மற்றும் மேம்பட்ட சேவை நிலைமைகளை வென்றெடுத்தாலும், கீழ் நடுத்தர வர்க்கத்தினர், பொதுவான வர்க்க உணர்வைப் பகிர்ந்து கொள்ளாமல், பழமைவாதமாக இருந்தனர். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களின் சேமிப்பு முதன்மையாக நிலம் மற்றும் தங்க நகைகள் வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும், அவர்களின் குழந்தைகளுக்குக் கல்வி கற்பதற்கும், அவர்கள் பாதுகாப்பான அரசு வேலைகளைப் பெறுவதற்கும், தங்கள் குழந்தைகளுக்குச் சீதனம் வழங்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது. இந்த வர்க்கம் ஒருமையில் லட்சியம் இல்லாதது, அதன் நிலையை மேம்படுத்துவதற்கான போராட்டத்தில் காலம் கடந்த பாதைகளைப் பின்பற்ற விரும்பியது.

தொழிலாள வர்க்கம் நகர்ப்புற, கிராமப்புற மற்றும் தோட்டத் தொழிலாளர்களை உள்ளடக்கியது. இந்த மூன்று பிரிவுகளும் ஒருவருக்கொருவர் தனிமைப்படுத்தப்பட்டனவாகவே இருந்தன. நகர்ப்புற தொழிலாளர்கள் முக்கியமாக கொழும்பு துறைமுகத்தில் வாழ்கின்றனர், மேலும், வீதி மற்றும் ரயில் போக்குவரத்து, ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தில் பணிபுரிகின்றனர். இவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே, இடதுசாரிக் கட்சிகளின் கீழ் தொழிற்சங்கங்களாக தங்களை ஒழுங்கமைத்து, ஒற்றுமை மற்றும் போர்க் குணத்தின் குறிப்பிடத்தக்க வெளிப்பாட்டின் மூலம் ஊதிய உயர்வு மற்றும் பிற நன்மைகளைப் பெற்றனர். கிராமப்புறத் தொழிலாளர்கள் முக்கியமாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களாக இருந்தனர். அவர்கள் பருவகால வேலைகளை மட்டுமே தேடினார்கள். சுதந்திரமடைந்த இலங்கையில் அவர்கள் சுமார் 300,000 பேராக இருந்தனர். முக்கியமாக அவர்கள் முற்றிலும் ஒழுங்கமைக்கப்படாதவர்கள். இந்த வர்க்கத்தில் இறுதியாக, தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் பணிபுரியும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவர்கள் சுமார் 800,000 பேர் கொண்ட தொழிலாள வர்க்கத்தின் மிகப்பெரிய அங்கத்தினராவர். அவர்கள் இலங்கை சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அடுக்குகளாகும். பாதிக்கும் மேற்பட்டவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் மற்றும் தோட்டங்களுக்கு வெளியே வேலை வாய்ப்பு அவர்களுக்குத் தடை செய்யப்பட்டிருந்தது. 1948 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தின் மூலம் அவர்களது வாக்குரிமையும் பறிக்கப்பட்டு, நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். 1947 தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளுக்கு வாக்களித்த தோட்டத் தொழிலாளர்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தச் சட்டம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கிட்டத்தட்ட ஒரு மில்லியன் தோட்டத் தொழிலாளர்கள் குடிமக்கள் அல்ல என்று 1953 மக்கள் தொகை கணக்கெடுப்பு காட்டியது.

## கடிதங்கள்

### பாடசாலை கட்டிட தூண்களால் உயிராபத்து

கல்முனை வலயத்தில் உள்ள காரைதீவு இகி.சங்க பெண்கள் பாடசாலையின் 90X25 நீள அகலமுள்ள மூன்று மாடிக் கட்டிடத்தில் முதலிரு தளங்களில் 08 வகுப்புகள் இருந்தன. அதில் சுமார் 240 மாணவிகள் கல்வி கற்று வந்ததுடன், கீழ்த் தளத்தில் அதிபர் அலுவலகம் உள்ளிட்ட நிர்வாக அலகு இயங்கி வந்தது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இந்த கட்டிடத்தின் தூண்கள் தூர்ந்து தளங்கள் மோசமாகக் காணப்பட்டுள்ளது. அந்த வகுப்புகளில் கற்ற மாணவிகளை உடனடியாக ஒன்று கூடல் மண்டபத்திலும் ஏனைய இடங்களிலும் மாற்றி வைத்திருக்கின்றார்.

இந்த வேளையில் இந்த ஆபத்தான கட்டிடம் இடிந்து விழுமானால் நூற்றுக்கணக்கான மாணவிகளைப் பலி கொள்ள ஏதுவாக இருக்கும் என்ற விடயம் பரவலாக ஊருக்குள் கசிந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் எஸ்.ஆர்.ஹசந்தி கிழக்கு மாகாண பிரதம செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இதற்கென்று ஒரு குழுவை நியமித்து உடனடியாக இதற்குரிய தீர்வை காணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

– வி.ரி. சகாதேவராஜா

# கொமர்ஷல் வங்கி TAGS விருதுகள் 2024இல் 4 விருதுகளை சுவீகரிப்பு



CA ஸ்ரீ லங்காவின் 'TAGS' விருதுகள் 2024 நிகழ்வில் கொமர்ஷல் வங்கி இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கல விருதுகளை வென்றுள்ளது. இது 2023ஆம் ஆண்டிற்கான அதன் வருடாந்த அறிக்கையின் மூலம் நிதி அறிக்கையிடலில் வங்கியின் திறமையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

விருதுகள் திட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட நான்கு பிரதான தூண்களான வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைபெறுதகு தன்மை ஆகியவற்றில் சிறந்து விளங்குவதன் பொருட்டு கொமர்ஷல் வங்கிக்கு நிதிச் சேவைத் துறையில் 'கூட்டாண்மை ஆளுகை வெளிப்பாட்டுக்கான தங்க விருதும், தனியார் துறை வங்கிகளில் சிறந்த ஆண்டு அறிக்கைக்கான தங்க விருதும் வழங்கப்பட்டது. மேலும் வங்கியானது அனைத்து துறைகளிலும் 'டிஜிட்டல் முறை மாற்றத்திற்கான அறிக்கையிடலில்' வெள்ளியையும், அத்துடன் ஒட்டுமொத்தமாக கூட்டு அறிக்கையிடலில் சிறந்து விளங்குவதற்கான வெண்கல விருதையும் வென்றது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கூறுகையில், "CA Sri Lanka TAGS விருதுகளில் எங்களின் நிலையான அங்கீகாரம் அனைத்து பங்குதாரர்களுக்கும் உரித்தானதாகும். ஏனெனில், அதன் நிதி அறிக்கையிடலில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நிர்வாகம் மற்றும் நிலைபெறுதகு தன்மை ஆகியவற்றுக்கான வங்கியின் உறுதிப்பாட்டை இது உறுதிப்படுத்துகிறது' என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'ஒவ்வொரு ஆண்டும், உலகளாவிய தரநிலைகள் மாறுவது மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள் உயரும் போது, எங்கள் வர்த்தகமானது அதற்கேற்ப அளவிலும் சிக்கல்தன்மையிலும் அதிவேகமாக வளர்கிறது. இதற்கு எங்கள் ஆண்டு அறிக்கைகளில் நாங்கள் வழங்கும் உள்ளடக்கத்தில் மாற்றங்கள் மற்றும் சேர்த்தல்கள் தேவை. இந்த மதிப்புமிக்க விருதுகள், நிதி அறிக்கையிடலில் நாங்கள் எப்போதும் மிக உயர்ந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய தரத்தை அடைவதை உறுதி செய்வதற்காக, எங்கள் வருடாந்த அறிக்கை குழுவின் தொழில்முறை மற்றும் ஆர்வத்திற்கு ஒரு பொருத்தமான சமிக்ஞையாகும்'.

# SLT-SERVICES இனால் சமுர்த்தி வங்கியின் கிளை வலையமைப்புக்கு வலுவூட்டல்



ஸ்ரீலங்கா ரெலிகொம் (சேர்விசஸ்) லிமிடெட் (SLT-SERVICES), சமுர்த்தி வங்கியுடன் கைகோர்த்து, அதன் டிஜிட்டல் மாற்றியமைப்பு பணிகளை துரிதப்படுத்த முன்வந்துள்ளது. இந்த மூலோபாய கைகோர்ப்பினூடாக, SLT-SERVICES இனால் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட டிஜிட்டல் வங்கியியல் மென்பொருள் தீர்வான 'FinOps', சமுர்த்தி வங்கியின் நாடு முழுவதிலும் பரந்து காணப்படும் 900 கிளைகளிலும் ஐந்தாண்டு காலப்பகுதியினுள் அறிமுகம் செய்யப்படவுள்ளது. அதனூடாக சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள் நவீன டிஜிட்டல் மயப்படுத்தப்படும்.

FinOps டிஜிட்டல் வங்கியியல் கட்டமைப்பை SLT-SERVICES இன் உள்ளக அணியினர் வடிவமைத்துள்ளதுடன், இலங்கையின் நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரத்தியேகமான சவால்கள் மற்றும் காணப்படும் வாய்ப்புகள் தொடர்பில் தீர்வுகளை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த நவீன கட்டமைப்பினூடாக, டிஜிட்டல் பகுதிகள், கள வசூலிப்பு செயற்பாடுகளுக்கான ஒப்பற்ற மொபைல் அப்ளிகேஷன் மற்றும் சுயமான பணிப்பாய்ச்சல்கள் போன்ற மேம்படுத்தப்பட்ட உள்ளம்சங்களை வழங்கும். அதன் உறுதியான பாதுகாப்பு கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு போன்றன பின்பற்றல் திறன் மற்றும் அளவீட்டுத்திறனை உறுதி செய்து, சமுர்த்தி வங்கியின் விரிவாக்கமடையும் செயற்பாடுகளுக்கு சிறந்த தீர்வாக அமைந்திருக்கும்.

FinOps நடைமுறைப் படுத்துவதனூடாக, சமுர்த்தி வங்கிக்கு மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் அனுபவங்களை, பாவனையாளருக்கு நட்பான சாதனங்களை பயன்படுத்தி, தன்னியக்கமயப்படுத்தப்பட்ட செயன்முறைகளினூடாக, தகவல்களறிந்த தீர்மானமெடுத்தல்களினூடாக பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும். இந்த மேம்படுத்தல்களினூடாக, செயற்பாட்டு வினைத்திறன் எய்தப்படும் என்பதுடன், கிராமிய மற்றும் நகர சமூகங்களிடையே நம்பிக்கையை வென்ற நிதிப் பங்காளர் எனும் வங்கியின் நிலையை மேலும் உறுதி செய்யும்.

வளர்ச்சி மற்றும் உள்ளடக்கம் எனும் பகிரப்பட்ட நோக்கிற்கமைய, இலங்கையின் நிதியியல் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான உறுதியான அர்ப்பணிப்பை இரு நிறுவனங்களும் பகிர்ந்து கொண்டுள்ளன. இந்தப் பங்காண்மையினூடாக, நவீன மயப்படுத்தப்பட்ட வங்கியியல் சேவைகளை தனது பரந்த வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பது, சமூகங்களுக்கு வலுவூட்டுவது மற்றும் தேசத்தின் பொருளாதார விருத்திக்கு பங்களிப்பு வழங்குவது போன்றன சமுர்த்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும்.

"எமது நிறுவனசார் தீர்வான 'FinOps' டிஜிட்டல் வங்கியியல் கட்டமைப்பு, உள்நாட்டு புத்தாக்கத்தை வெளிப்படுத்துவதுடன், சிக்கல்கள் நிறைந்த சவால்களுக்கு தீர்வாக அமையும். சமுர்த்தி வங்கியின் டிஜிட்டல் வலுவூட்டப்பட்ட நிதிக் கட்டமைப்பை ஏற்படுத்தும் நோக்கில் நாம் கைகோர்ப்பதையிட்டு பெருமை கொள்வதுடன், முன்னணி தகவல் தொடர்பாடல் தொழினுட்ப தீர்வுகள் வழங்குனர் எனும் வகையில், எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு சகாயமான விலைகளில் நிலைபேறான தீர்வுகளை பெற்றுக் கொடுக்க எம்மை அர்ப்பணித்துள்ளோம்" என SLT-SERVICES இன் பிரதம செயற்பாட்டு அதிகாரி அசேல சி.ஆர்.கலபத்திகே கூறினார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சி.டி.களுஆரச்சி சமுர்த்தி வங்கியின் சார்பாக கருத்துத் தெரிவிக்கையில், 'SLT-SERVICESஇனால் வடிவமைக்கப்பட்டுள்ள டிஜிட்டல் வங்கியியல் கட்டமைப்பு என்பது, சமுர்த்தி திட்டத்தின் வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை பெருமளவு மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கும். அதன் பிரத்தியேகமான உள்ளம்சங்கள் மற்றும் அளவிடக்கூடிய தன்மை போன்றன அனுகூலம் பெறுவோரின் எதிர்பார்ப்புகளை வினைத்திறனான முறையில் நிவர்த்தி செய்வதற்கு வலுவூட்டும் என்பதுடன், உள்ளடக்கமான நிதிச் சேவைகளை நாடு முழுவதிலும் பெற்றுக் கொடுக்கும் எமது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்வதாகவும் அமைந்திருக்கும்" என்றார்.

உள்நாட்டு வளங்கள் மற்றும் ஆற்றல்களை பயன்படுத்துவதனூடாக, சமுர்த்தி வங்கியின் ஆற்றல்கள் மேலும் வலிமைப்படுவது மட்டுமன்றி, இலங்கையினுள் அந்நியச் செலாவணி இருப்பை தக்க வைத்துக் கொள்ளவும், பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கவும், உயர் தொழினுட்பத்திறன் வாய்ந்த, உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட, சகாயமான வங்கியியல் மென்பொருள் கட்டமைப்பை ஏற்படுத்தவும் முடிந்துள்ளது.



# 'இசைக் காட்சி'



இலங்கையின் மிகப்பெரிய பாடசாலைகள் அடிப்படையிலான கிழக்கத்திய இசை நிகழ்வான ஸ்வர செயல்திறன் இசைக் காட்சி கொழும்பு - 07 மியூசியஸ் கல்லூரி அரங்கத்தில் பெப்ரவரி 15ம் திகதி நடைபெறப்பட்டது. அந்த மாலை மாயாஜாலத்தைப்போல் இருந்தது ஏனெனில் எட்டு லைசியம் பாடசாலை கிளைகளான நுகேகொட, வத்தளை, பாணதுறை, நுவரெலியா ,கம்பஹா ,அனுராதபுரம், குருணாகலை மற்றும் இரத்தினபுரி போன்றவற்றின் 748 இளம் குரல்கள் ஒத்திசைவுடன் இணைந்து திறன் பாரம்பரியம் மற்றும் புதுமைகளைக் கொண்டு கணிசமான ஒரு காட்சியைக் காட்சிப்படுத்தின.

லைசியம் சர்வதேச பாடசாலைகளின் நிறுவனர் டாக்டர். மொஹான் லால் கிரேரோ அவர்கள் பார்வையாளர்களை நோக்கி , லைசியத்தில் எங்கள் வழிகாட்டும் கண்ணோட்டம் 'நாம் கற்பிக்க பிறந்தவர்கள்' என்பதே , உங்களை உலக அளவில் குடியுரிமையாளர்களாக உருவாக்க ஊக்கம் அளிக்கின்றது, ''மாணவர்கள் எமது தாயகத்தின் எதிர்காலத்தைப் புதிதாக உருவாக்க உதவுவார்கள்''.என இதயம் கனிந்து பேசினார். எங்கள் மாணவர்களுக்கு அவர்களுடைய செழிப்பான பாரம்பரியத்தைப் போற்றும் ஒரு மேடையை வழங்கும் போது உலகளாவிய மேடையில் தைரியமாக நடக்கவும் ஸ்வர என்ற பாதை உதவுகின்றது.

இந்த செயல்திறன் இசைக் காட்சி சிங்கப்பூர் அரசுத் தூதரகத்தின் கவுன்சிலர் தோம் பேட்ச்பக்குபோங்கேபாங்; இந்திய உயர் ஆணையத்தின் ஸ்வாமி விவேகானந்த கலாசார மைய இயக்குநர் டாக்டர் அங்குரன் தத்தா; பாகிஸ்தான் உயர் ஆணையத்தின் பத்திரிகை மற்றும் கலாச்சார தொடர்பு பணியாளரான அதீல் சத்தார்; மற்றும் இந்தோனேசிய அரசுத் தூதரகத்தின் சமூக மற்றும் கலாச்சார விவகாரங்களின் கவுன்சிலராக இருந்த யாடி சுரியாஹாடி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மேலும் முக்கியமான கலைஞர்கள் லைசியம் மேலாண்மை மற்றும் ஆதரவு வழங்கும் விசாரத் திரு திலும் நிரஞ்சா இயக்கிய ஸ்வர ஒரு இசைக்காட்சி மட்டுமாக இல்லாமல் , பழைமையை புதுமையாக ஒருங்கிணைத்து ஸ்வரங்களின் காலத்தால் கடந்த அழகின் வழியாக ஒரு உயிரோடு கலந்த பயணமாக இருந்தது. டாக்டர் மொஹான் லால் கிரேரோ மற்றும் டாக்டர் குமாரி கிரேரோ ஆலோசகர் மற்றும் ஒத்துழைக்கும் முதல்வர் ஆகிய இருவரும் இந்த அசாதாரணமான முயற்சிக்கான அடித்தளத்தை அமைத்தனர். மேலும் ஸ்வர லைசியத்தில் இசைக்கலையின் சிறந்த பாரம்பரியமாக ஆண்டுதோறும் நடைபெறும் திட்டமாக உருவாக உள்ளது.







# சிவராத்திரி பூஜைகள் மற்றும் நிகழ்வுகள்...

உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்களால் புதன்கிழமை (26) அன்று சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. சகல ஆலயங்களிலும் சிவபெருமானுக்கு நான்கு யாம பூஜைகள் நடைபெற்றதுடன் நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவ பூஜை நடைபெற்றது. அத்துடன் சில ஆலயங்களில் கலை நிகழ்வுகளும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(தமிழ் மிரர் நிருபர்கள்)

## பதுளை பச்சையம்மன் ஆலயம்



## காரைதீவு அருள்மிகு ஸ்ரீ ஆதிசிவன் ஆலயம்



## மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்



## மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயம்



## மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்



## நுவரெலியா ஸ்ரீ லங்காதீஸ்வர ஆலயம்



## இரத்தினபுரி இரத்தினேஸ்வரம் (சிவன்) ஆலயம்



பங்களாதேஷ்

## பங்களாதேஷுக்கு
# ஆபத்து

பங்களாதேஷில் நடக்கும் மோதல் காரணமாக இறையாண்மைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக, அந்நாட்டு இராணுவ தளபதி வாகர் உஜ் ஜமான் கூறியுள்ளார்.

பங்களாதேஷில் கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. இதையடுத்து தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறினார். தற்போது அங்கு முகம்மது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பதவியில் உள்ளது.



பங்களாதேஷில் தொடர்ச்சியாகப் போராட்டங்களும் மோதல்களும் நடைபெற்று வரும் நிலையில், அந்நாட்டு இராணுவ தளபதி மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

“அதிகாரிகள் வழக்குகளில் சிக்கி இருப்பதால், இளைய அதிகாரிகள் முதல் மூத்த அதிகாரிகள் வரை அச்சத்தில் உள்ளனர். சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவதால், ஆயுதப்படைகளுக்குக் கடமை அதிகரித்து உள்ளது. உடனடியாக மக்கள் ஒற்றுமையுடனும், நிறுவனங்கள் கட்டுப்பாட்டுடனும் பணியாற்ற வேண்டும்.

“மக்கள் இடையே தொடர்ச்சியாக அதிகரித்து வரும் மோதல் காரணமாக நாட்டின் இறையாண்மைக்கு ஆபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. தொடர்ச்சியாக உங்களுக்கு உள்ளே சண்டையிட்டுக் கொண்டு இருந்தால், நாட்டின் சுதந்திரத்துக்கும், ஒற்றுமைக்கும் ஆபத்து ஏற்படும் என எச்சரிக்கிறேன்” என்றார்.

தாய்லாந்து




## கல்வி சுற்றுலா சென்ற
# பஸ் விபத்து: 18 பேர் பலி

தாய்லாந்து நாட்டில், கல்விச் சுற்றுலா சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டின் தலைநகர் பாங்காக் நகரிலிருந்து கிழக்கே பிரச்சின்பரி மாகாணத்தில், புதன்கிழமை (26) அதிகாலை, இரட்டை மாடி கொண்ட பஸ் ஒன்று பயணித்துக் கொண்டு இருந்தது. அந்த பஸ்ஸில் 49 பேர் கல்விச் சுற்றுலாவுக்காகச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், புதன்கிழமை(26) அதிகாலை 3 மணியளவில், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் மலையிலிருந்து விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், 18 பேர் உயிரிழந்ததுடன், 31 பேர் காயமடைந்தனர்.

வேகத்தடுப்பு சரிவரப் பிடிக்காமல் பஸ் விபத்தில் சிக்கியிருக்கக் கூடும் என சந்தேகிக்கப்படுகிறது.

அமெரிக்கா



## கனிம வள ஒப்பந்தத்தில்
# கையெழுத்திடுவதற்கு ஜெலன்ஸ்கி சம்மதம்

அமெரிக்காவுக்கு செல்லும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அமெரிக்காவுடன் கனிம வள ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

அப்போது, ரஷ்யாவுக்கு எதிரான போரில் அனைத்து உதவிகளையும் அமெரிக்காவிடம் இருந்து கேட்டுப்பெறவும், அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜெலன்ஸ்கி கனிமவள ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு, வெள்ளிக்கிழமை (28) அமெரிக்காவுக்கு வருகை தரவுள்ளதாக, அமெரிக்க ஜனாதிபதி அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ரஷியா போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா வழங்கிய நிதி உதவிகளுக்குப் பதிலாக உக்ரைனில் உள்ள அரிய வகை கனிம வளங்களை வெட்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவுக்கு கால வரம்பில்லாமல் வழங்க டிரம்ப் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கரீபியன் தீவு

## சொகுசு விடுதியில்
# இளம் பெண்களின் சடலங்கள் மீட்பு



கரீபியன் தீவு நாடான பெலிசேவில் உள்ள கடற்கரை சொகுசு விடுதியில் 3 இளம்பெண்கள் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் மசாசூட்ஸ் நகரைச் சேர்ந்த பெண்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தோழிகளான மூன்று பேரும் கரீபியன் தீவு நாடான பெலிசேவுக்கு சுற்றுலா சென்றுள்ளனர். குட்டி தீவு நாடான அதன் கடற்கரை நகரான சான் பெட்ரோவில் உள்ள சொகுசு விடுதியில் அவர்கள் மூன்று பேரும் ஓர் அறையை எடுத்துத் தங்கியிருந்தார்.

இந்த நிலையில் திடீரென அவர்கள் மூன்று பேரும் ஹோட்டல் அறையில் தங்கியிருந்தபோது மர்மமான முறையில் உயிரிழந்துள்ளனர். தகவலறிந்த பொலிஸார், சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து 3 பெண்களின் சடலங்களையும் மீட்டனர்.

அத்துடன், அறையிலிருந்த காலி மது போத்தல்கள், போதை மாத்திரைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தனர். முதற்கட்ட விசாரணையில் அவர்கள் மூன்று பேரும் அதீத போதை காரணமாக இறந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தெலங்கானா

# தெலுங்கானாவில் தெலுங்கு கட்டாயம்

தெலங்கானாவில் வரும் 2025-2026ஆம் கல்வி ஆண்டு முதல் அனைத்து பாடசாலைகளிலும் தெலுங்கு மொழி கட்டாயப் பாடமாக்கப்படும் என்று, அம்மாநில முதல்வர் ரேவந்த் ரெட்டி அறிவித்துள்ளார்.

தெலங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி, செவ்வாய்க்கிழமை (25) மாலை தலைநகர் டெல்லிக்குப் புறப்பட்டார். அவர் புதன்கிழமை (26) பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தார்.

அப்போது தெலங்கானாவுக்கு வரவேண்டிய நிதி மற்றும் மாநிலம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பிரதமரிடம் பேசினார்.

இச்சந்திப்பு குறித்துப் பேசிய ரேவந்த் ரெட்டி,

“மத்திய அரசின் மும்மொழி திட்டம் குறித்து தற்போது பரவலாக விவாதம் நடந்து வருகிறது. தெலங்கானாவில் வரும் 2025-2026ஆம் கல்வி ஆண்டு முதல் 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை தெலுங்கு மொழி கட்டாயப் பாடமாக்கப்படும்.

இது, தெலங்கானாவில் கடந்த 2018ஆம் ஆண்டு முதல் அமுலிலிருந்தாலும், அதனை முந்தைய பிஆர்எஸ் அரசு முழுமையாக அமுல்படுத்தவில்லை. இந்த திட்டத்தை நாங்கள் முழுமையாக அமுல்படுத்துவோம்.

சிபிஎஸ்இ, ஐசிஎஸ்இ போன்ற பிற கல்வி வாரியங்களில் படிக்கும் மாணவர்களுக்கும் தெலுங்கு மொழி கட்டாய பாடமாக்கப்படும். பிற மாநிலங்களிலிருந்து தெலங்கானா வந்து படிக்கும் மாணவர்கள் சுலபமாகத் தெலுங்கு மொழி கற்க ‘வெண்ணிலா’ எனும் புத்தகத்தை மாநில அரசு வெளியிடும்” என்றார்.

அசாம்

# அசாமில் நிலநடுக்கம்

அசாம் மாநிலம், மோரிகான் மாவட்டத்தில், வியாழக்கிழமை(27) அதிகாலை 2.25 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிச்டர் அளவுகோலில் 5.0ஆக பதிவாகியுள்ளதாக, தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் மையமானது தரைமட்டத்தில் இருந்து சுமார் 16 கிலோமீற்றர் ஆழத்தில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக வங்கக்கடலில், செவ்வாய்க்கிழமை (25) அதிகாலை 6.10 மணிக்கு ரிக்டர் 5.1 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் கால்பந்தாட்ட லீக் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் வெற்றிக் கிண்ணத் தொடர்:
# சம்பியனானது விம்பிள்டன்




எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் புத்தளத்தில் நடாத்தப்பட்டு வந்த புத்தளம் கால்பந்தாட்ட லீக் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் வெற்றிக் கிண்ணத்தொடரில்,

புத்தளம் நகரின் மிகவும் பழைமை வாய்ந்த அணியாகத் திகழும் விம்பிள்டன் கழகம் சம்பியனானது.

லெஜன்ட்ஸ் கழகத்தின் அனுசரணையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியானது புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் புதன்கிழமை (26) நடைபெற்றபோது, 2-1 என்ற கோல் கணக்கில் நியூ ஸ்டார்ஸ் கழகத்தை வென்றே விம்பிள்டன் சம்பியனானது.

விம்பிள்டன் சார்பாக, முஹம்மது நிப்லான், முஹம்மது ஹம்தான் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, நியூ ஸ்டார் சார்பாகப் பெறப்பட்ட கோலை அவ்ஸாப் பெற்றார்.

இத்தொடரின் சிறந்த கோல் காப்பாளாராக விம்பிள்டனின் கோல் காப்பாளர் முஹம்மது இம்ரான் தெரிவானார்.



## கனிஷ்ட வீரர்களின் கிழக்கின் சமர்:
# வென்ற மட்டு நியூ ஈஸ்டர்ன் ஸ்டார்




ஹஸ்பர்.ஏ.எச்

திருகோணமலை லெஜன்ட்ரி கிரிக்கெட் அகடமியுடனான கனிஷ்ட வீரர்களின் கிரிக்கெட் சமரில் மட்டக்களப்பு நியூ ஈஸ்டர்ன் ஸ்டார் கிரிக்கெட் அகடமி வென்றது.

திருகோணமலை நகர சபை விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (22), ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற 13, 15 வயதுகுட்பட்ட இரண்டு போட்டிகளிலும் நியூ ஈஸ்டர்ன் ஸ்டார் வென்றது.

இதில் 13 வயதுக்குட்பட்ட பிரிவில் நாயகனாக ஈஸ்டர்ன் ஸ்டாரின் பிரனேஷும், 15 வயதுகுட்பட்ட பிரிவில் அதே அகடமியைச் சேர்ந்த அபூர்வனும் தெரிவாகினர்.

# சர்வதேச கிரிக்கெட்டில் பந்துவீச குனுமெனுக்கு அனுமதி

சர்வதேச கிரிக்கெட் சபையால் பந்துவீசுவதற்கு அவுஸ்திரேலியாவின் சுழற்பந்துவீச்சாளர் மற் குனுமெனுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.



இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடரைத் தொடர்ந்து குனுமென்னின் பந்துவீச்சுப்பாணி குறித்து முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தனது பந்துவீச்சுப் பாணியை பிறிஸ்பேணில் சோதித்தமையைத் தொடர்ந்தே அவருக்கு பந்துவீச்சுப்பாணியின்போது அனைத்து விதமான பந்துகளும் அனுமதியளிக்கப்பட்ட 15 பாகைக்குள்ளேயே முழங்கை நீட்சி இருந்துள்ளது.

## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:
# தென்னாபிரிக்காவை வீழ்த்திய இலங்கை

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், நவி மும்பையில் புதன்கிழமை (26) நடைபெற்ற தென்னாபிரிக்கா மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இலங்கை மாஸ்டர்ஸ் அணி வென்றது. ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

தென்னாபிரிக்கா: 180/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹஷிம் அம்லா 76 (53), டேன் விலாஸ் ஆ.இ 28 (13), ஜக் கலிஸ் 24 (20), மோர்னே வான் விக் 17 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: சத்துரங்க டி சில்வா 2/28 [4], தம்மிக பிரசாத் 1/31 [4])

இலங்கை: 183/3 (17.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: அசேல குணரத்ன ஆ.இ 59 (33), சிந்தக ஜயசிங்க ஆ.இ 51 (25), உபுல் தரங்க 29 (26), குமார் சங்கக்கார 16 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: தன்டி ஷபலாலா 2/32 [4])

போட்டியின் நாயகன்: அசேல குணரத்ன.

# சம்பியன்ஸ் கிண்ணம்: வெளியேற்றப்பட்டது இங்கிலாந்து



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

குழு பியில் அவுஸ்திரேலியாவும், தென்னாபிரிக்காவும் ஏற்கெனவே ஒவ்வொரு வெற்றி மற்றும் போட்டி கைவிடப்பட்ட நிலையில் தலா 3 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், லாகூரில் புதன்கிழமை (26) நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து இங்கிலாந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், இப்ராஹிம் ஸட்ரானின் 177 (146), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாயின் 41 (31), மொஹமட் நபியின் 40 (24), அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடியின் 40 (67) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஜொஃப்ரா ஆர்ச்சர் 3, லியம் லிவிங்ஸ்டோன் 2, அடில் ரஷீட் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 326 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சார்பாக ஜோ றூட் 120 (111) ஓட்டங்களைப் பெற்றபோதும் ஓமர்ஸாய் (5), மொஹமட் நபி (2), ரஷீட் கான், குல்படின் நைப், பஸல்ஹக் பரூக்கியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 49.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 317 ஓட்டங்களையே பெற்று எட்டு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஸட்ரான் தெரிவானார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அவுஸ்திரேலியாவை ஆப்கானிஸ்தான் எதிர்கொள்ளவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 28, பெப்ரவரி 2025, இல. 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.